ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2470/02 - 2026 ජනවාරි මස 05 වැනි සඳුදා - 2026.01.05

2470/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: R/De/L.A./OCH/233.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2019/ HW/90.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் மஹர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 245A, சூரிய பாலுவ கிராம அலுவலர் பிரிவில் உள்ள சூரியபாலுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் அதிபதி சார்பாக கம்பஹா மாவட்ட நில அளவையாளர் அத்தியட்சகரினால் 2022.03.07 ஆந் திகதி தயாரிக் கப்பட்ட சுவட்டின் வரைபட இல. க. வ. 510821, தொகுதி இல. 05, தாள் இல. 5 கொண்டதுமான 0.0329 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள் (02) விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றது:

01. **துண்டு இல. 379**

காணியின் பெயர்: கோன்கஹவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், 20 - 30 வயதுடைய தென்னை மரங்கள் 4உம், 10 - 15 வயதுடைய காமரங்கா மரம் மற்றும் 1 - 5 வயதுடைய தென்னங்கன்றும் உள்ளது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோரு பவர்: பஹின்தர தேவகே சமிந்த உதய ஷாந்த, இல. 16/1/பீ, பண்டாரவத்தை, கடவத்தை, (காணி எடுத்த லுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0080 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 385**

காணியின் பெயர்: - ; விபரம்: வீதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியாது, (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0249 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. பீ. எம். லலித் பண்டார,
பிரதேச செயலாளர்
மற்றும் காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
மஹர.

பிரதேச செயலகம்,
மஹர,
2026, சனவரி 01.

EOG 01 - 0041

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: என்சிபி/எச்ஜி/எல்02/462.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03 ஜே/80/
டபிள்யூஎஸ்/498.

மேற்படி தலைப்பின் கீழ் அறிவித்தல் இலக்கம் 12 - 781 - அதிவிசேட வர்த்தமானி இல. 1631/28, 2009, திசெம்பர் 10 ஆந் திகதி.

அறிவித்தல் இலக்கம் 08 - 254, அதிவிசேட வர்த்தமானி இல. 1664/15, 2010, யூலை 28 ஆந் திகதி.

அறிவித்தல் இலக்கம் 10 - 245, அதிவிசேட வர்த்தமானி இல. 2460/04, 2025, ஒற்றோபர் 28 ஆந் திகதி.

மேற்படி இவ் அறிவித்தல்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இவ் அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட திகதிகள் நீக்கப் பட்டு அவற்றிற்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்ட திகதிகள் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் மூலம் அறிவிக்கின்றேன்.

| நீக்கப்பட வேண்டிய திகதி | நீக்கப்பட வேண்டிய திகதிக்குப் பதிலாக மாற்றீடு செய்யப்பட வேண்டிய திகதி |
|---|---|
| 2025, நவெம்பர் 25 | 2026, தை 27 |
| 2025, நவெம்பர் 18 | 2026, தை 20 |

ஆர். ஐ. பி. சந்தியா பீ ரத்னமலல,
பிரதேச செயலாளர்,
ஹிங்குராக்கொட.

பிரதேச செயலகம்,
ஹிங்குராக்கொட.
2025, திசெம்பர் 30.

EOG 01 - 0040

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.